இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 85 – ஒலி : 88 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஐப்பசி 21 – சனிக்கிழமை 07 நவம்பர் 2026 – மதுரை 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 85 - Issue 88 : Thiruvalluvar Year - 2057 - Ippasi 21 - Saturday 07 November 2026 - Madurai 8 Pages ₹ 5.00

இதுவரை 7 லட்சத்து 10 ஆயிரம் புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன! ஒரே நாளில்

தமிழ்நாட்டின் பல்வேறு கல்லூரிகளுக்கு 10 ஆயிரம் புத்தகங்கள்!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!







சென்னை, நவ.7-

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேரில் சந்தித்தவர்கள் அளித்த புத்தகங்களில் திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை தூய சவேரியார் (தன்னாட்சி) கல்லூரி நூலகத்திற்கு 5,000 புத்தகங்கள் - தென்காசி மாவட்டம், வாசுதேவநல்லூர், ரஹ்மானியா கல்வி கூடம் வாட் பயிற்சி மையத்திற்கு 3,000 புத்தகங்கள் - திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டம், அரசு கலை கல்லூரி நூலகத்திற்கு 2000 புத்தகங்கள் என 10,000 புத்தகங்கள் நேற்று முன்தினம் (05.11.2026) வழங்கப்பட்டது.

இதுவரை 7 லட்சத்து 10 ஆயிரம் புத்தகங்கள் வழங்கல்!

இதுவரை 7 லட்சத்து 10 ஆயிரம் புத்தகங்களை பல்வேறு கல்லூரிகள் மற்றும் மாவட்ட நூலகங்களுக்கு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கி யுள்ளார்.

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேரில் சந்தித்தவர்கள், அவருக்கு அளித்த புத்தகங்களை, தங்கள் கல்லூரி மற்றும் பகுதிகளில் உள்ள நூலகங்களுக்கு வழங்கிடுமாறு வைத்த கோரிக்கையினை ஏற்றுக் கொண்ட கழகத் தலைவர் அவர்கள்;

திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை தூய சவேரியார் (தன்னாட்சி) கல்லூரி நூலகத்திற்கு 5,000 புத்தகங்கள் - தென்காசி மாவட்டம், வாசுதேவநல்லூர், ரஹ்மானியா கல்வி கூடம் வாட் பயிற்சி மையத்திற்கு 3,000 புத்தகங்கள் - திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டம், அரசு கலை கல்லூரி நூலகத்திற்கு 2000 புத்தகங்கள் என மொத்தம் 10,000 புத்தகங்களை கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (05.11.2026), காலை, சென்னை, அண்ணா அறிவால யத்தில் உள்ள கழக அலுவலகத்தில், அந்தந்த நூலக நிர்வாகிகளிடம் வழங்கினார்.

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தனக்கு வரப்பெற்ற புத்தகங்களில் இதுவரை 7,10,000 (7 இலட்சத்து 10 ஆயிரம்) புத்தகங்களை பல்வேறு கல்லூரி மற்றும் நூலகங்களுக்கு வழங்கியுள்ளார்.

'டெட்ராய்ட் மாநிலம்' என்ற பெயரை தமிழ்நாடு முழுவதுமாக இழந்தது!

'கியா' வாகன தயாரிப்பு நிறுவனம் - ஆந்திராவில் 1.5 பில்லியன் டாலர் முதலீடு!

'ரீல்ஸ்' த.வெ.க. ஆட்சியால் தமிழ்நாட்டுக்குப் பின்னடைவு!

ஜதராபாத், நவ.7-

த.வெ.க. ஆட்சியில் டெட்ராய்ட் மாநிலம் என்ற பெயரை தமிழகம் முழுவதுமாக இழந்துள்ளது. உலகின் மிகப்பெரிய வாகன தயாரிப்பு நிறுவனமான கியா தனது நிறுவனத்தின் ஒன்று புள்ளி 5 பில் லியன் டாலர் முதலீட்டுகளை ஆந்தி ராவில் மேற்கொள்ளவும் முடிவு செய்துள்ளது.

தி.மு.க. ஆட்சியில் இந்தியா வின் டெட்ராய்ட் ஆக கார் உற்பத்தி துறையில் சென்னை அபார வளர்ச்சி பெற்றது. கடந்த திராவிட மாடல் ஆட்சியில் பொருளாதாரம், தொழில்துறை அனைத்திலும் தமிழ்நாடு முதன்மை மாநிலமாக திகழ்ந்தது. த.வெ.க. அரசு பொறுப் பேற்றதிலிருந்தே அனைத்துத் துறைகளிலும் தமிழ்நாடு பின் னோக்கி செல்ல தொடங்கியுள் ளது. ஹூண்டாய் - கியா நிறுவ னங்களுக்கு வாகன உதிரி பாகங்கள் வழங்கும் ஹ்வாஷின், சியோயான் மற்றும் இவாமெட் ஆகிய மூன்று நிறுவனங்கள், ஆந்திராவில் முதலீடு செய்ய முடிவு செய்துள்ளன. இந்நிலை யில், இதற்கெல்லாம் போரிடியாக த.வெ.க. ஆட்சியில் டெட்ராய்ட் மாநிலம் என்ற பெயரை தமிழகம் முழுவதுமாக இழந்துள்ளது தெரியவந்துள்ளது. தென்கொரிய முன்னணி வாகன நிறுவனமான கியா ஒன்று புள்ளி 5 பில்லியன் டாலர் முதலீட்டை ஆந்திர மாநி லம் பெற்றுள்ளது.

ரீல்ஸ்க்கு நேரம் ஒதுக்கும் தொழில்துறை அமைச்சர் கீர்த் தனா தனது துறையில் கவனம் செலுத்தாமல் உள்ளதே தொழில் துறையில் தமிழ்நாடு பின்தங்கிப் போனதற்குக் காரணம் என தொழில் முனைவோர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

ஆந்திராவின் அனந்தபூர் ஆலையில் கியா நிறுவனம் தனது உற்பத்திச் செயல்பாடுகளை விரி வாக்கம் செய்யத் திட்டமிட்டுள்ளது. அனந்தபூர் ஆலையில் முன் மொழியப்பட்டுள்ள இந்த விரிவாக் கத்தில், ஒரு புதிய உற்பத்திப் பிரி வும் அடங்கும். இதன் மூலம் ஆண்டு உற்பத்தித் திறனை 3 லட்சம் வாகனங்களிலிருந்து 5 லட்சம் வாகனங்களாக உயர்த்த வாய்ப்புள்ளது. இது தொடர்பாக அடுத்த வாரம் விசாகப்பட்டினத்தில் நடைபெறும் ஆந்திர முதலீட்டு மாநாட்டில் அதிகாரப்பூர்வ அறி விப்பு வெளியாகும் என எதிர்பார்க் கப்படுகிறது.

மேலும், புரிந்துணர்வு ஒப்பந்த மும் கையெழுத்தாக வாய்ப்புள் ளது. தென் கொரியாவைச் சேர்ந்த மூன்று வாகன உதிரிபாக உற்பத் தியாளர்களும் திராவிட மாடல் ஆட்சியில் பேச்சுவார்த்தை மேற் கொண்டது. ஏற்கனவே, த.வெ.க. அரசின் செயலற்ற தன்மையால் ஆயிரம் கோடி ரூபாய் முதலீட்டை இழந்து, வாகன உதிரிபாக நிறுவ னங்கள் ஆந்திர அரசுடன் புரிந்து ணர்வு ஒப்பந்தங்களில் கையெ முத்திட்டுள்ள நிலையில், தற்போது ஒன்றரை பில்லியன் டாலர் முதலீட்டையும் ஆந்திர அரசு தட்டிச் சென்றுள்ளது.

முதலமைச்சர் விஜயின் நிர் வாகத் திறமையற்ற நடவடிக்கை களால், தமிழகம் வாகன உற்பத் தியில் முதன்மை மாநிலம் என்ற பட்டியலில் இருந்து பின்னுக்குத் தள்ளப்பட்டு வருவதாக பொருளா தார நிபுணர்கள் கவலை தெரிவித் துள்ளனர்.

முரசு புயலில் நடுக்கடலில் சிக்கி மாயமான சென்னை காசிமேடு மீனவர்கள் 9 பேர் பலி!

உயிரைப் பணயம் வைத்து தொழில் செய்யும் மீனவர்களின் உயிரோடு விளையாடும் சோப்ளாங்கி அரசுக்கு கண்டனம்!

உயிரிழந்த மீனவர் குடும்பங்களுக்கு அதிகமான இழப்பீட்டை அரசு வழங்க வேண்டும்; சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் வலியுறுத்தல்!

சென்னை, நவ.7-

முரசு புயல் நேரத்தில் நடுக்கட லில் சிக்கி மாயமான சென்னை காசி மேடு மீனவர்கள் 9 பேரின் உடல்கள் ஆந்திர கடலோர பகுதியில் கரை ஒதுங்கியுள்ளது அறிந்து மிகுந்த வருத்தமுற்றேன் என்றும், உயிரி ழந்த மீனவர்களின் குடும்பத்துக்கு ஏற்கனவே அறிவிக்கப்பட்டதைவிட இன்னும் அதிகமான இழப்பீட்டை அரசு தரப்பில் வழங்க வேண்டும் என்றும் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர் கள் வலியுறுத்தியுள்ளார்.



இது குறித்து எதிர்க்கட்சித் தலை வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

முரசு புயல் நேரத்தில் நடுக்கடலில் சிக்கி மாயமான சென்னை காசிமேடு மீனவர்கள் 9 பேரின் உடல்கள், ஆந் திர கடலோர பகுதியில் கரை ஒதுங்கி யுள்ளது அறிந்து மிகுந்த வருத்த முற்றேன்.

அந்த மீனவச் சகோதரர்களை இழந்து தவிக்கும் அவர்களின் குடும்பத்தினருக்கு என்னுடைய ஆறு தலையும் இரங்கலையும் தெரி வித்துக் கொள்கிறேன்.

மீனவர்கள் மாயமானது தொடர் பாக இங்குள்ள சோப்ளாங்கி அரசுக்கு தகவல் தெரிவித்தும் அவர்களை மீட் பது தொடர்பாக எந்தவொரு நடவடிக் கையும் எடுக்கப்படவில்லை என்று இறந்தவர்களின் உறவினர்கள் கண்ணீரோடு கூறுகின்றனர்.

புயல் நேரத்தில் மீனவர்கள் கடலுக் குள் செல்ல அனுமதி தந்தது யார்? ஒருவேளை மீனவர்கள் முன் கூட்டியே கடலுக்குச் சென்றிருந் தால், Wireless கருவிகள் மூலம் தொடர்பு கொண்டு அவர்கள் கரை திரும்புவதை உறுதி செய்திருக்க வேண்டிய அரசு, எப்படி தவறியது?

உயிரைப் பணயம் வைத்து தொழில் செய்யும் மீனவர்களின் உயிரோடு விளையாடும் அளவுக்கு அலட்சியம் காட்டியுள்ள இந்த ஆட்சியாளர்களை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

இந்த சம்பவத்தில் உயிரிழந்த மீனவர்களின் குடும்பத்துக்கு ஏற்க னவே அறிவிக்கப்பட்டதைவிட இன்னும் அதிகமான இழப்பீட்டை அரசு தரப்பில் வழங்க வேண்டும்.

இது மாதிரியான துயரங்கள் இனி யும் நடக்காமல் இருக்க, உரிய நடவ டிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

மிக முக்கியமாக கடலுக்குச் செல் லும் ஒவ்வொரு மீனவரும் ஆயுள் காப்பீடு செய்துள்ளதை உறுதி செய்ய வேண்டுமென வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.